2018 ஜுலை 3]

252—

மின் உற்பத்தி நிலையம்

***27507—திரு. எ.பி. சக்திவேல்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் குப்பையிலிருந்து மின் உற்பத்தி செய்யும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேலம் மாநகராட்சியில் குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். சேலம் மாநகராட்சி முன்வருமென்றால், மின்சார வாரியம் அதற்குண்டான பணிகளை செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறை மாநிலமாக இருந்த தமிழகத்தை, தன் சீரிய திட்டங்களாலும், செயல் திறனாலும் மின் மிகை மாநிலமாக மாற்றித் தந்த இதய தெய்வம் அம்மா அவர்களின் நினைவலைகளைப் போற்றி வணங்குகிறேன். இதய தெய்வம் அம்மா அவர்கள் வழியில் எரிசக்தித் துறையினை ஏற்றம் பெறச் செய்யும் வகையில், பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், அவற்றிற்கு நிதியொதுக்கி செயல்படுத்த உதவிடும் மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்களையும், சொல்லியவண்ணம்*

செயலாற்றும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும், தங்களையும் வணங்கி மகிழ்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரம் முழுவதும் மாநகராட்சிமூலம் நாள்தோறும் சுமார் 400 டன் குப்பைக் கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன. இதில் செவ்வாய்பேட்டை மின் மயானத்தில் மட்டும் இரண்டரை டன் குப்பைக் கழிவுகளைக் கொண்டு Bio-gas உற்பத்தி செய்யப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. அதேபோல, அம்மாபேட்டை பகுதியில் உள்ள வீராணம் குப்பைமேட்டில் ஏழரை டன் அளவுள்ள குப்பைக் கழிவுகள்மூலம் Bio-gas உற்பத்தி செய்யப்பட்டு, முன்னோட்டமாக genset மூலம் 150 தெருவிளக்குகள் இயக்கப்படுகின்றன. மீதமுள்ள 390 டன் அளவுள்ள குப்பைக் கழிவுகள் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இக்குப்பைக் கழிவுகளைக் கொண்டு Bio-gas உற்பத்தி செய்து, மேலும் இத்திட்டத்தினை விரிவுபடுத்தவும், நடைமுறைப்படுத்தவும், Net meter எனப்படும் அளவீட்டுக் கருவிகளை தேவைக்கு ஏற்ப சேலம் மாநகராட்சிக்கு வழங்கி ஊக்கப்படுத்திடவும் வேண்டும் என மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களைத் தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல மாநகராட்சி முன்வருகின்றபோது அதற்கு உதவுவதற்கு மின் வாரியம் தயாராக இருக்கிறது. இரண்டாவது Bio-gas என்பது மின்சார வாரியத்தினால் தயாரிக்கப்படுவதில்லை. அது மாநகராட்சியால் உற்பத்தி செய்யப்படுகின்றது. பல நகராட்சிகளில், குறிப்பாக பல்லாவரம் நகராட்சியில்கூட இதுபோன்ற ஒரு திட்டத்தை நான்கரை கோடி ரூபாய் செலவில் உருவாக்க வேண்டுமென்று திட்ட அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்ட அறிக்கையின்படி மனுக்களையெல்லாம் பெற்று ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். தனியார் யாராவது முன்வருவார்கள் என்றாலும்கூட மின்சார வாரியம் 6 ரூபாய் 16 பைசாவிற்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொள்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, Bio-gas உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கும் என்று சொன்னால்

2018 ஜூலை 3]

மின்சார வாரியம் அதைப் பெற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் net meter *வேண்டுமென்று இன்னொரு கேள்வியைக் கேட்டிருக்கிறார். அதை உடனடியாக வழங்குவதற்கு மின்சார வாரியம் தயாராக இருக்கிறது. மின்சாரம் தயாரிப்பதற்கு யாராவது முன்வருவார்களானால்* net meter *வழங்குவதில் பிரச்சினை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகர், சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி, புதிய தொழிற்சாலைகளும், புதிய தொழிற்கூடங்களும் அமைக்கப்பட்டு வளர்ந்துவரும் பகுதியாக உள்ளது. குறிப்பாக, புதிய விசைத்தறிக் கூடங்கள்* Auto Loom *தறிகளைக்கொண்டு அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் 200 கே.வி.ஏ. அளவுள்ள புதிய மின்மாற்றிகளுக்கான தேவை அதிகரித்து வருகிறது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் மின் பயனீட்டாளர்களின் தேவைக்கேற்ப, 100 கே.வி.ஏ. மற்றும் 200 கே.வி.ஏ. மற்றும் 500 கே.வி.ஏ. மின்மாற்றிகளை சேலம் மாநகர் முழுவதும் அமைத்து, புதிய தொழில் நிறுவனங்களையும், தொழிற்கூடங்களையும் உருவாக்கித்தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், அரசுப் புறம்போக்கு நிலங்களில் அமைந்துள்ள திருக்கோயில்களுக்கு புதிய மின் இணைப்பு வழங்குவதில் சில தடைகள் இருக்கின்றன. வட்டாட்சியர் மற்றும் கிராம நிருவாக அலுவலர் கையொப்பமிட்ட பட்டா நிலங்களுக்கு மட்டுமே மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. அரசுப் புறம்போக்கு நிலங்களில் உள்ள திருக்கோயில்களுக்கு ஒருகால பூஜை திட்டத்தைப் போல ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின்னழுத்தம் குறைவாக இருக்கின்ற காரணத்தால் புதிய transformer வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். இப்போது transformer குறைவாக இருக்கிறது. அதனால் முன்னுரிமை அடிப்படையில் எங்கெங்கே transformer தேவையிருக்கின்றதோ அங்கெல்லாம் நாங்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.*

இரண்டாவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நத்தம் புறம்போக்கிலே இருக்கின்ற கோயில்களுக்கு மின் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அரசு நிலத்தில் இருக்கின்ற கோயில்களுக்கு மின்சார இணைப்பை கொடுக்கக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் ஓர் ஆணையிட்டிருக்கின்றது. இதுபோன்று மாநிலம் முழுவதும் பிரச்சினை இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி நடவடிக்கை எடுக்கப்படும். மின்சாரத் துறையின் கடந்த ஆய்வுக் கூட்டத்தின்போது நாங்கள் இதுகுறித்துப் பேசியிருக்கிறோம். சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பின்னால் ஆய்வுக் கூட்டம் நடத்தி, அதற்கு ஓர் ஏற்பாடு செய்யவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நாங்கள் கேட்டிருக்கின்றோம். சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பிறகு உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டு இதுபோன்று இருக்கின்ற கோயில்களுக்கு மின்சாரம் கொடுப்பதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் பகுதியிலே ஊர்மேலழகியான் என்ற பகுதியில் ஏற்கெனவே 33 கே.வி.ஏ. துணை மின் நிலையம் முழுவீச்சிலே செயல்பட்டு வருகிறது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற பல தனியார் நிறுவனங்கள் காற்றாலை அமைப்பதற்குண்டான திட்டத்தைச் செயல்படுத்த தன்னார்வத்தோடு முன்வருகின்றன. எனவே, அந்த 33 கே.வி.ஏ. துணை மின் நிலையத்தை 110 கே.வி.ஏ. துணை மின் நிலையமாக நீங்கள் தரம் உயர்த்தித் தந்தால் காற்றாலை மூலமாக அந்தப் பணிகளெல்லாம் நடக்கக்கூடிய*

2018 ஜூலை 3]

வாய்ப்பு ஏற்படும். எனவே, தமிழக அரசின் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இதைச் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே காற்றாலைமூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை கொண்டுவருவதற்காக இதுபோன்ற துணை மின் நிலையங்களை நிறைய அமைத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தப் பகுதியிலும் 110 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. மின்னழுத்தத்தைக் குறைப்பதற்காக 110 கே.வி.ஏ. துணை மின் நிலையத்தை அமைக்க வேண்டும். தேவை இருப்பின், அதையும் ஆய்வு செய்கின்றோம். அந்தப் பகுதியில் காற்றாலைகள் அதிகம் இருக்கின்ற காரணத்தினால், அங்கு தயாரிக்கும் மின்சாரத்தைக் கொண்டுவருவதற்கு கோபுரங்கள் அமைப்பதில் பிரச்சினைகள் இருக்கின்றன. காற்றாலைகள் அமைப்பதற்கான நிலத்தை விவசாயிகள் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால், அங்கு உற்பத்தியாகின்ற மின்சாரத்தை மற்ற மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, பணிகள் பல கட்டங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான் இதுபோன்று பிரச்சினைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 110 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு வருவதாகச் சொல்லியிருப்பதால், பணிகளை வேகப்படுத்துவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கின்ற பீமரப்பட்டி ஊராட்சியின் ஒரு பகுதி கல்வராயன் மலையில் உள்ள மேல்மலைச்சி கிராமம். அதன் அடிவாரத்தில் இருக்கின்ற உள்செக்கடி பகுதிக்கு இதுவரை மின் வசதி செய்து தரப்படவில்லை. அதேபோன்று, தண்டராம்பட்டு ஒன்றியம், குயிலம் ஊராட்சியில், காட்டுக்கு நடுவில் சென்னபட்டி என்கிற கிராமம் உள்ளது. இந்த இரண்டு கிராமங்களுக்கும் மின் வசதி ஏற்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டவை மலைப் பகுதிகளாக இருக்குமென்று நினைக்கின்றேன். அவ்வாறு மலைப் பகுதிகளாக இருந்தால், வனத் துறையின் சார்பாக தற்போது அனுமதி கிடைப்பது கடினமாக இருக்கிறது. அதனால்தான், அந்தக் கிராமங்களில் சோலார் விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும், அப்பகுதிகளில் தார்ச் சாலைகள் இருப்பின், அச்சாலைகளின் வழியாக மின் கம்பங்கள் அமைத்து தேவையான இடங்களுக்கு மின் வசதி செய்து கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மற்றொரு கூடுதலான தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன். தட்கல் திட்டத்தைப் பற்றி ஏற்கெனவே காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருந்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. 1-7-2018 முதல் 31-7-2018 வரை தட்கல் அடிப்படையில் யாரெல்லாம் பதிவு செய்கிறார்களோ, அவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும். இந்த ஆண்டில் 10 ஆயிரம் மின் இணைப்புகள் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 253, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், மாண்புமிகு*